



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

“தேமதுரத் தமிழோசை உலகமெலாம்”






Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 258 | 12.03.2026 | THURSDAY | MAASI : 28 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 258 | 12.03.2026 | வியாழக்கிழமை | மாசி : 28 | விலை : ரூ.5/–


## தமிழக வளர்ச்சிக்காக அல்லும் பகலும்

# “அயராது பாடுபடுகிறோம்”

## திருச்சியில் பிரதமர் மோடி பேச்சு

திருச்சி: மார்ச்.12-

“வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வளர்ச்சியடைந்த தமிழ்நாட்டை உருவாக்குவதே எங்கள் இலக்கு. இதற்காக மத்திய அரசு அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வருகிறது” என்று திருச்சியில் பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

சுமார் ரூ.5,650 கோடி மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்து, அடிக்கல் நாட்டுவதற்காக பிரதமர் மோடி, இன்று திருச்சிக்கு வருகை தந்தார்.

திருச்சி பஞ்சப்பூரில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் இரண்டு அமிர்த பாரத் விரைவு ரயில்கள், இரண்டு விரைவு ரயில்கள் மற்றும் ஒரு பயணிகள் ரயில் ஆகியனவற்றின் சேவையை பிரதமர் மோடி கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.



பின்னர் விழாவில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, ‘‘இன்றைய நிகழ்ச்சி தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானது. சுமார் ரூ.5,650 கோடி மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களோடு தொடர்புடையது இந்த நிகழ்ச்சி.

இந்த திட்டங்கள், தூய்மையான எரிசக்தி, பெட்ரோல் தயாரிப்பு, கிராமப்புற இணைப்பு, நெடுஞ்சாலை மேம்பாடு உள்ளிட்ட முக்கிய திட்டங்கள் தொடர்பானவை. இந்த திட்டங்கள் எரிசக்தியின் அணுகலை அதிகரிப்பதோடு, தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்பை அளிக்கவல்லது.

பாரத் பெட்ரோலியம் நிறுவனத்தின் நகர எரிவாயு கட்டமைப்புக்கு அடிக்கல் நாட்டுவது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த திட்டத்துக்காக சுமார் ரூ.3,700 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. இந்த கட்டமைப்பின் மூலம் நீலகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் சுமார் 9 லட்சம் குடும்பங்களுக்கும் நூற்றுக்கணக்கான நிறுவனங்களுக்கும் குழாய் வழியாக இயற்கை எரிவாயுவை கொண்டு சேர்க்கப்பட இருக்கிறது. வீடுகளுக்கே குழாய் வழியில் எரிவாயு கொண்டு செல்லப்படுவதால், இது மக்களின் வாழ்க்கையை மேலும் எளிதாக்கும்.

இதன்மூலம், நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகள் உருவாகும். இயற்கை எரிவாயு என்பது சுற்றுச்சூழலுக்கு ஏற்றது. 8 ஆண்டுகளில், 4 கோடி மரங்களை நடுவதற்கு இணையான சுற்றுச்சூழல் நன்மைகளை அளிக்க வல்லது இந்த திட்டம் என்று எனக்கு தெரிவிக்கப்பட்டது.

சென்னையில் உள்ள மசகு எண்ணெய் கலவை ஆலை இன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இந்த வகை ஆலைகளில் இது உலகிலேயே மிகப் பெரியது என்பது உங்களுக்கு பெருமிதத்தை அளிக்கும். இந்த ஆலை தமிழ்நாடு மற்றும் பிற மாநில தொழிற்சாலைகளின் தேவையை நிறைவேற்றும். இந்த ஆலை காரணமாக மசகு எண்ணெய் இறக்குமதி பெருமளவில் குறையும். இது நாட்டுக்கு மிகப் பெரிய சேமிப்பை வழங்கும்.

இன்று நான், தமிழ்நாட்டில் 370 கி.மீ நீளமுள்ள 89 கிராமப்புற சாலைகளை தொடங்கிவைத்துள்ளேன். இந்த பணிகள் அனைத்தும், பிரதமரின் கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது கிராமப்புறங்களில் சந்தைகள், பள்ளிகள் மற்றும் சுகாதார வசதிகளுக்கான இணைப்பை கணிசமாக மேம்படுத்தும்.

ஆடி திருவாதிரை விழாவில் கலந்து கொள்ள கடந்த ஆண்டு கங்கை கொண்ட சோழபுரத்துக்கு வருகை தந்தது மகிழ்ச்சி நினைவில் உள்ளது. மாமன்னன் ராஜேந்திர சோழன் கட்டிய கங்கை கொண்ட சோழபுரம் ஆலயத்தின் ஆயிரமாவது ஆண்டு தொடக்கத்தை நாம் கொண்டாடினோம். அது யுனெஸ்கோ அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட இடம்.

உலகின் பல பகுதிகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளை அது ஈர்த்து வருகிறது. இன்று நாம் கங்கைகொண்ட சோழபுரம் அருகே பசுமை புறவழிச்சாலைக்கு அடிக்கல் நாட்டியுள்ளோம். இந்த நெடுஞ்சாலை, ஆலயத்துக்கு வெகு அருகில் இருப்பதால் சுற்றுலாப் பயணிகளுக்கும் பக்தர்களுக்கும் பாதுகாப்பானதாக இருக்கும். கோயிலுக்கு வரும் வாகனங்கள் தவிர்த்து மற்ற வாகனங்கள் புறவழிச் சாலையில் திருப்பிவிடப்படும்.

கடந்த வாரம் நான் மதுரை வந்தபோது 8 நவீன மறுவடிவமைக்கப்பட்ட ரயில் நிலையங்களை திறந்து வைத்தேன். இன்று பல புதிய ரயில்களின் இயக்கத்துக்கு பச்சைக் கொடி காட்டி உள்ளேன்.

நாகர்கோவில், கோவை, ராமேஸ்வரம், மயிலாடுதுறை, காரைக்குடி உள்ளிட்ட பகுதிகளை மற்ற பகுதிகளோடு இந்த ரயில்கள் இணைக்கின்றன. இதனால், சுற்றுலாத்துறை அதிகரித்து இளைஞர்களுக்கு பல்வேறு வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

மேம்பட்ட இந்தியாவை உருவாக்க மேம்பட்ட தமிழ்நாட்டை உருவாக்குவதுதான் எங்கள் இலக்கு. தமிழ்நாட்டு மக்களின் நலனுக்கு முழு அர்ப்பணிப்போடு இருக்கிறது மத்திய அரசு. மாநிலத்தின் மேன்மைக்கு நாங்கள் அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வருகிறோம். தொடர்ந்து பாடுபட்டு வருவோம்’’ என்று பிரதமர் மோடி பேசினார்.

இந்த நிகழ்ச்சியில், மத்திய அமைச்சர் பியூஷ் கோயல், எல்.முருகன், மாநில அமைச்சர் தங்கம் தென்னரசு, எதிர்க்கட்சித் தலைவரும், அதிமுக பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## “காஸ் சிலிண்டர் பிரச்சினையில் பீதி வேண்டாம், ஏனெனில்...”

### மத்திய இணை அமைச்சர் ஷோபா

**புதுடெல்லி: மார்ச்.12–**

ஈரான் மீதான அமெரிக்கா இஸ்ரேல் போரின் தாக்கத்தால் நாடு முழுவதும் எல்பிஜி எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், நாட்டு மக்கள் பீதியடைய வேண்டாம் என்றும், நிலைமையை சீராக்க அரசு மும்முரமாக பணியாற்றி வருகிறது என்றும் மத்திய இணை அமைச்சர் ஷோபா கரந்த்லாஜே தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது, “யாரும் பீதியடைய வேண்டாம். ஓட்டல்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்க எங்கள் அரசு உறுதி பூண்டுள்ளது.

இந்த நிலைமையை சீராக்கும் பணியில் அரசு மும்முரமாக பணியாற்றி வருகிறது. சர்வதேச அளவில் நிலவும் சூழலை கருத்தில் கொண்டு மக்களும் இதற்கு ஒத்துழைப்பு தர வேண்டும்.

போர் மேகம் சூழ்ந்துள்ள பகுதிகளில் உள்ள இந்தியர்களை தாயகம் கொண்டு வரும் பணியை மேற்கொண்டு வருகிறோம். அமெரிக்கா இஸ்ரேல், ஈரான் போரால் நமது தேசம் எதிர்கொண்டுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இந்த முயற்சியில் மாநில அரசுகளின் ஒத்துழைப்பும் தேவை என நான் கோருகிறேன்.

தேசம் முழுவதும் உள்ள பல்வேறு மாநிலங்களின் உணவக சங்கங்கள் கடிதம் மூலமாகவும், தொலைபேசி வழியாகவும் தொடர்பு கொண்டு காஸ் தட்டுப்பாடு குறித்து எங்களுக்கு தெரிவித்துள்ளனர்.

தற்போது ஏற்பட்டுள்ள மோதல் காரணமாக சர்வதேச நாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. நமது நாட்டுக்கு தேவையான கச்சா எண்ணெயை பொறுத்தவரையில் சுமார் 8090 சதவீதம் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்து வருகிறோம். அது இயற்கை ஆதாரங்களில் ஒன்று.

காஸ் தட்டுப்பாடு விவகாரம் குறித்து மத்திய பெட்ரோலிய அமைச்சர் ஹர்தீப் சிங் புரியிடம் பேசி உள்ளேன்” என அவர் கூறினார்.

ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருவதால், சமையல் மற்றும் வர்த்தக காஸ் சிலிண்டர்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் நாடு முழுவதும் ஓட்டல்கள் உட்பட பல்வேறு தொழில்கள் ஸ்தம்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## மதுரை மாநகரில் ரூ.76 கோடியில் அழகாகும் வைகை ஆறு!

மதுரை: மார்ச்.12-

மதுரை மாநகரில் கோச்சடை முதல் விரகனூர் மதகு அணை வரையிலான 14 கி.மீ. வைகை ஆற்றின் இரு கரைகளையும் அழகுபடுத்தி மக்கள் ரசிக்கவும், பொழுது போக்கவும், நீரோட்டத்தை சீராக்கவும் உலக வங்கி உதவியுடன் மாநகராட்சி நிர்வாகம், ரூ.76.16 கோடியில் மேம்படுத்த உள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலை வருசநாடு பகுதியில் உற்பத்தியாகும் வைகை ஆறு தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களின் முக்கிய நீராதாரமாகத் திகழ்கிறது. 240 கி.மீ. பயணித்து ராமநாதபுரம் பெரிய கண்மாயில் கலந்து, பின் வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

ஒரு காலத்தில் ஆண்டு முழுவதும் இரு கரைகளையும் தொட்டபடி வைகையில் தண்ணீர் சென்றது. தற்போது கொசுக்கள் உற்பத்தியாகும் இடமாகவும், கழிவுகளைக் கொட்டும் கிடங்காகவும் மாறி விட்டது.

இந்நிலையில் மாநகராட்சி ஆணையாளராக சித்ரா வந்தபிறகு, வைகை ஆற்று கரைகளில் இறைச்சிக் கழிவுகள், குப்பை கொட்டுவது தடுக்கப்பட்டுள்ளது. மேலும், வைகை ஆறு கரைகளில் ‘ஏஐ’ ‘கேமரா’க்களை பொருத்தி குப்பை கொட்டுவதை கண்காணித்து வைகை ஆற்றை முழுமையாக பாதுகாக்க ஏற்பாடுகளையும் செய்து வருகிறார்.

ஆனாலும், பொதுப்பணித் துறையின் பாராமுகத்தால் வைகை ஆற்றுக்குள் முட்புதரும், ஆகாயத் தாமரையும், நீரை அதிக அளவு உறிஞ்சும் கருவேல மரங்களும் வளர்ந்து அடர்ந்த காடு போல காணப்படுகிறது.

கடந்த காலத்தில் மணல் அள்ளிய இடங்கள், குண்டும் குழியுமாகவும், அபாயகரமான பள்ளத் தாக்காகவும் காணப்படுகின்றன. வைகை ஆறு மூலம் மாநகரின் நிலத்தடி நீரை மேம்படுத்தவும், அழகுபடுத்தவும் மதுரை மாநகராட்சி, உலக வங்கி உதவியுடன் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நிதி மூலம் ரூ.76.16 கோடியில் சிறப்புத் திட்டம் தயார் செய்துள்ளது.

இதுகுறித்து பொறியியல் பிரிவு அதிகாரிகள் கூறுகையில், ‘‘கோச்சடை முதல் விரகனூர் மதகு அணை வரையிலான 14 கி.மீ. தொலைவுக்கு ஆற்றின் இரு கரைகளும் நீரோட்டத்துக்கு பாதிப்பு இல்லாத வகையில் அழகுப் படுத்தப்பட உள்ளது.

கோச்சடையில் வைகை கரையில் சுமார் 14 ஏக்கர் நிலம் மாநகராட்சிக்கு சொந்தமாக உள்ளது. இந்த இடத்தில் 8 ஏக்கரில் வண்டியூர் பூங்கா போன்று குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கவரும் பிரம்மாண்ட பூங்கா அமைகிறது.

வண்டியூர் பூங்காவில் உள்ள பொழுதுப்போக்கு அம்சங்கள் அத்தனையையும் இந்தப் பூங்காவில் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது. ஆற்றின் கரைகளில் இடம் உள்ள பகுதிகளில் சிறு பூங்காக்கள், பெண்களுக்கான ஜிம், யோகா மையம், வைகை ஆறு வியூ பாயின்ட், ஆற்றில் தண்ணீர் வந்தால் கீழே இறங்கி நீராட படித்துறைகளும் அமைக்கப்பட உள்ளன.

இரவிலும் வைகை கரை சாலைகளில் மக்கள் அச்சமின்றி நடமாட இரவைப் பகலாக்கும் அலங்கார ஹைடெக் மின் விளக்குகள் அமைக்கப்படும்.

கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்குவதைப் பார்ப்பதற்கு ஆழ்வார்புரம் வைகை ஆற்றில் தலா 50 பேர் வரை அமரக்கூடிய வகையில் 2 நிரந்தர பார்வையாளர் மாடம் அமைக்கப்படும்.

வைகை ஆறு முற்றிலும் சீரமைக்கப்பட்டு அழகுப்படுத்தும் பணிகளுக்கு பொதுப்பணித் துறையிடம் தடையில்லா சான்று பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## “கேட்டதும் கொடுத்தார் முதல்வர் ஸ்டாலின்!” ஆத்தூர் தொகுதிக்கு வந்த டைட்டல் பார்க்:

### அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு



சின்னாளபட்டி, மார்ச்.12:

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் கலைஞர் நூற்றாண்டு விழா கூட்டுறவு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு, இரண்டாம் கட்டமாக 515 விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் விழா இன்று சிறப்பாக நடைபெற்றது.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சௌ.கங்காதரணி தலைமை தாங்கினார். மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் சுபாஷினி, திண்டுக்கல் சரக துணைப் பதிவாளர் கௌதம் கார்த்திக, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் பாறைப்;பட்டி இராமன், பிள்ளையார்நத்தம் முருகேசன், ராஜேந்திரன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் ஸ்ரீஇராகவ்பாலாஜி வரவேற்று பேசினார்.

விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பேசியதாவது:

"ஆத்தூர் தொகுதி மாணவர்களின் உயர்கல்வித் தேவைக்காக அரசு கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் கொண்டு வரப்பட்டுள்ளன. மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், டைட்டல் பார்க் அமைக்கவும் திட்டமிட்டுள்ளோம். மதுரை வந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் எங்கள் பகுதிக்கு டைட்டல் பார்க் வேண்டுமென்று கேட்டேன்; அவர் ஒரு மணி நேரத்திலேயே அதற்கான அறிவிப்பை வெளியிட்டார். இதுதான் திராவிட மாடல் ஆட்சி."

நிகழ்ச்சியில் ஆத்தூர் கூட்டுறவு கல்லூரி முதல்வர் பெ.பாலகுருசாமி, கூட்டுறவு ஒன்றிய மேலாண்மை இயக்குநர் ம.செல்வகுமார், கூட்டுறவு சார் பதிவாளர்கள் அறிவழகன், அம்பிகேஸ்வரன், கல்லூரி நிர்வாக அலுவலர் கணேசன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்;பாளர் பாப்பாத்தி, ஒன்றிய துணைச் செயலாளர்கள் ராஜேந்திரன், எம்.சி.பாண்டியன், கலாபச்சை, முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் செல்வி காங்கேயன், காணிக்கைசாமி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் ராஜகணேஷ், வசந்தகுமார், திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். நிறைவாக கல்லூரி நிர்வாக அலுவலர் இரா.கணேசன் நன்றி கூறினார்.

# திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலராக மயில் அவர்கள் முறைப்படி பொறுப்பேற்றுக்கொண்டார்

திருப்பூர், மார்ச். 12-

திருப்பூர், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், அவர் தனது அலுவலகப் பணிகளுக்கான பதிவுகளைச் சரிபார்த்து, அதிகாரப்பூர்வமாகத் தனது பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இவருக்கு மாவட்ட



நிர்வாகத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் சக ஊழியர்கள் தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டனர். புதிதாகப் பொறுப்பேற்றுள்ள சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் மயில், திருப்பூர் மாவட்டத்தின் வருவாய் நிர்வாகப் பணிகளைத் தொடர்ந்து கவனிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.




■ தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், சமூகநலன் (ம) மகளிர் உரிமைத்துறையின் சார்பில் "பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின்" கீழ் மாவட்ட மகளிர் அதிகார மையம் மூலமாக ஆதிதிராவிட நல அலுவலக சமூகநீதி விடுதியில் தங்கி பயிலும் 60 மாணவிகளை ஒரு நாள் கல்வி சுற்றுலாவாக, திருநெல்வேலி பொருநை அருங்காட்சியத்திற்கு அழைத்து செல்லும் வாகனத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர் வழி அனுப்பி வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன் உள்ளார்.

# திருச்சியில் மகளிர் தினத்தை உற்சாகமாகக் கொண்டாடத் தயாராகும் அரசு அலுவலர்கள்

திருச்சி, மார்ச். 12-

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் சார்பில், உலக மகளிர் தினக் கொண்டாட்டம் திருச்சியில் வருகின்ற மார்ச் 14ஆம் தேதி (சனிக்கிழமை) காலை 9.00 மணியளவில் நடைபெறும் இந்த விழாவிற்கு, தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநிலத் தலைவர் மகேந்திரகுமார் வழிகாட்டியுள்ளார். இந்நிகழ்வில் மாநில மற்றும் அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த மகளிர் அணி நிர்வாகிகள் பெருந்திரளாகக் கலந்து கொள்ள



உள்ளனர்.*தலைவர் மகேந்திரகுமார் அறிக்கை:*இது குறித்து மாநிலத் தலைவர் மகேந்திரகுமார் விடுத்துள்ள அறிக்கையில், "மகளிர் முன்னேற்றம் மற்றும் மேம்பாடு குறித்த கோரிக்கைகள் பல நிறைவேற்றப்பட்டிருந்தாலும், இன்னும் சில நிலுவையில் உள்ளன. இது போன்ற நிகழ்வுகள், மகளிர் தங்கள் கோரிக்கைகளை முன்னிறுத்துவதற்கும், பணிச் சுமையால் ஏற்படும் மன அழுத்தங்களைக் குறைத்து உற்சாகமடைவதற்கும் ஒரு சிறந்த களமாக அமையும். தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து நிலை பெண் அலுவலர்களும் இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும்" என்று அன்போடு கேட்டுக்கொண்டுள்ளார்.

# துபாய் விமான நிலையம் அருகே ட்ரோன் தாக்குதல்: இந்தியர் உட்பட 4 பேர் காயம்

துபாய், மார்ச்.12-

ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாய் நகரில் உள்ள சர்வதேச விமான நிலையத்துக்கு அருகே ஈரான் ஏவிய இரண்டு ட்ரோன்கள் விழுந்ததில், ஒரு இந்தியர் உட்பட 4 பேர் காயமடைந்தனர்.

ஈரான் மீது இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து தாக்குதல் நடத்தி வருகின்றன. பதிலுக்கு ஈரான், இஸ்ரேல் மீதும், மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க நிலைகள் மீதும் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இந்நிலையில், ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாய் நகரில் உள்ள சர்வதேச விமான நிலையத்துக்கு அருகே ஈரான் ஏவிய இரண்டு ட்ரோன்கள் விழுந்தன. இதில், கானா நாட்டைச் சேர்ந்த இருவர், வங்கதேசத்தைச் சேர்ந்த ஒருவர், இந்தியாவைச்



சேர்ந்த ஒருவர் என மொத்தம் 4 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில், ஈரான் ஏவிய ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை தடுத்து நிறுத்தி வருவதாக ஐக்கிய அரபு அமீரகத்தின் பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது. இந்த தாக்குதல், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு எதிரான ஈரானின் பதில் நடவடிக்கைகளின் ஒரு பகுதி என கூறப்படுகிறது. இரண்டு ட்ரோன்கள் துபாய் விமான நிலையம் அருகே விழுந்தாலும், விமான போக்குவரத்து வழக்கம்போல நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய அரபு அமீரகத்தின் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், “கேட்கப்படும் பெரிய சத்தங்கள் அனைத்தும் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை தடுக்க வான்வழி பாதுகாப்பு அமைப்புகள் செயல்படுவதன் விளைவாகும்” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகம் மட்டுமின்றி, பஹ்ரைன், கத்தார் உள்ளிட்ட வளைகுடா நாடுகளுக்கு எதிராகவும் ஈரான் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் மூலம் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இதனால் சில கட்டமைப்புகள் சேதமடைந்துள்ளதோடு, எண்ணெய் உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்நாடுகள் தெரிவித்துள்ளன.

# தாய்லாந்தின் புக்கெட் விமான நிலையத்தில் ஓடுதளம் தற்காலிகமாக மூடல்

பாங்காக், மார்ச்.12-

தாய்லாந்தின் புக்கெட் விமான நிலையத்தில் ஓடுதளம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. புக்கெட் விமான நிலையத்தில் இறங்கியபோது ஏர் இந்தியா விமானம் தரையில் மோதியது. விமான நிலைய ஓடுதளத்தில் மோதி தரையிறங்கியதால் லேண்டிங் கியர், முன்சக்கரம் சேதம் ஆகியுள்ளது. விமான மீட்பு நடவடிக்கை காரணமாக



அந்த ஓடுதளம் மாலை 6 மணி வரை மூடப்படுகிறது.

# சமயநல்லூரில் அரசியல் எழுச்சிப் பொதுக்கூட்டம் கோரிக்கைகளை முழங்கிய வெள்ளாளர் முன்னேற்றக் கழகம்

மதுரை, மார்ச். 12-

மதுரை மாவட்டம், சமயநல்லூர் அருகே உள்ள திருவாலவாயநல்லூர் கிராமத்தில், வெள்ளாளர் முன்னேற்றக் கழகம் மற்றும் தென்னக மக்கள் இயக்கம் சார்பில் மாபெரும் அரசியல் எழுச்சிப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கழகத்தின் தென் மண்டல அமைப்பாளரும், மாநில மகளிரணி தலைவியுமான அன்னலட்சுமி சகிலா கணேசன் தலைமை தாங்கினார். நிறுவனர் மாநிலத் தலைவர் ஹரிஹரன் பிள்ளை முன்னிலை வகித்தார். தென்னக மக்கள் இயக்க நிறுவனத் தலைவர் ஐயப்பா கார்த்திக் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார்.



கூட்டத்தில் பேசிய நிர்வாகிகள், வெள்ளாளர் சமுதாயத்தின் பெருமைகளையும், தற்போதைய வாழ்வாதார நிலை குறித்த கவலைகளையும் எடுத்துரைத்தனர். குறிப்பாக, மகளிரணி தலைவி அன்னலட்சுமி சகிலா கணேசன் அவர்களின் சிறப்பான செயல்பாடுகளைப் பாராட்டிய நிர்வாகிகள், அவரை மதுரை மாநகராட்சி மேயர் வேட்பாளராக முன்னிறுத்த வேண்டும் என விருப்பம் தெரிவித்தனர்.

*அரசுக்கு விடுக்கப்பட்ட முக்கிய கோரிக்கைகள்:*

இக்கூட்டத்தில் அரசுக்கு கீழ்க்கண்ட 11 அம்சக் கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன:

வேளாளர் பெயரை மாற்று சமுதாயத்திற்கு வழங்குவதை ரத்து செய்ய வேண்டும். 42 உட்பிரிவுகளை ஒன்றிணைத்து 'வேளாளர்' என அரசாணை இயற்ற வேண்டும். வேளாளர் சமூகத்தினர் மீது பதியப்பட்ட பி.சி.ஆர் (PCR) வழக்குகளை ரத்து செய்ய வேண்டும். சோழவந்தான் ரயில்வே மேம்பாலத்திற்கு 'கல்வி வள்ளல் சண்முகனார் பிள்ளை' பெயர் சூட்டி சிலை அமைக்க வேண்டும்.

மகளிர் தினத்தை முன்னிட்டு, கூட்டத்திற்கு வந்திருந்த பெண்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டன. தென் மண்டல அமைப்பாளர் அன்னலட்சுமி சகிலா கணேசனுக்கு நிர்வாகிகள் சார்பில் ஆளுயர மாலை மற்றும் வீரவாள்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டன. இக்கூட்டத்தில் திருச்சி, திருநெல்வேலி, சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலிருந்து திரளான தொண்டர்கள் கலந்து கொண்டனர். வாடிப்பட்டி போலீசார் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.



# புதுச்சேரி ஆளுநர் மாளிகைக்குள் உறங்கிய நபர்: பாதுகாப்பு பணியில் இருந்த காவலர்கள் கூண்டோடு இடமாற்றம்

புதுச்சேரி, மார்ச். 12-

புதுச்சேரி ஆளுநர் மாளிகையின் அதிநவீன பாதுகாப்பு வளையத்தை மீறி, ஜார்க்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த ஹர்திக் ஜா என்பவர் உள்ளே புகுந்து உறங்கிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆளுநர் மாளிகை வளாகத்திற்குள் ரகசியமாக நுழைந்த அந்த நபர், பாதுகாக்கப்பட்ட பகுதிக்குள் யாருக்கும் தெரியாமல் சென்று அங்கேயே தூங்கியுள்ளார். இதனைத் தொடர்ந்து காலையில் அவர் கண்டறியப்பட்டு, உடனடியாகக் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார்.

*காவலர்கள் மீது கடும் நடவடிக்கை:*

மிகவும் பாதுகாப்பாக இருக்க வேண்டிய ஆளுநர் மாளிகையிலேயே இத்தகைய ஊடுருவல் நிகழ்ந்தது, அங்கு பணியில் இருந்த காவலர்களின் கவனக்குறைவை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. இந்த பாதுகாப்பு மீறல் குறித்து அதிர்ச்சியடைந்த உயரதிகாரிகள், அந்த நேரத்தில் பணியில் இருந்த அனைத்துக் காவலர்களையும் கூண்டோடு இடமாற்றம் செய்துள்ளனர்.

மட்டுமின்றி, பாதுகாப்புப் பணியில் மிகப்பெரிய அலட்சியத்தைக் காட்டிய அந்தக் காவலர்கள் விரைவில் பணிநீக்கம் (சஸ்பெண்ட்) செய்யப்படவும் அதிக வாய்ப்புள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இந்த ஊடுருவல் சம்பவம் புதுச்சேரி அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில், ஆளுநர் மாளிகையின் பாதுகாப்புப் பணிகள் தற்போது தீவிர மறுஆய்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.




■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுதேர்தல்2026 நடைபெறுவதை முன்னிட்டு மதுரை மாவட்டத்தில் வாக்குச்சாவடிகளில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பாக, ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரநிதிகள் முன்னிலையில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

# போர் நிறுத்தத்தை கைவிடக்கோரிக்கை

தென்காசி, மார்ச்.12-

தென்காசி மாவட்டத்தில், அமெரிக்கா இஸ்ரேல் நாடுகள் போர் நிறுத்தத்தை கைவிடக் கோரி தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாநில மையம் தெரிவித்த கோரிக்கையின்படி, தமிழக முழுவதும் உள்ள அனைத்து பள்ளிகளிலும் ஆசிரிய பெருமக்கள் போர் நிறுத்த கோரிக்கை அட்டை அணிந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.



# மணலி ஆ.முல்லைவாயல் பகுதியில் சமையல் சிலிண்டர் ஏற்றுவதற்கு நீண்ட வரிசையில் நின்ற லாரிகள்

மணலி, மார்ச்.12-

சென்னை மணலி ஆ.முல்லைவாயில் பகுதியில் உள்ள ஒன்றிய அரசுக்கு சொந்தமான பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தின் எல்.பி.ஜி.கேஸ் சிலிண்டர் நிரப்பும் நிறுவனம் உள்ளது. இங்கிருந்து சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் வேலுர் உள்ளிட்ட பகுதிகளுக்கு சமையல் கேஸ் சிலிண்டர்கள் சப்ளை செய்யப்படுகின்றது. தற்போது ஈரான், இஸ்ரேல் போர் காரணமாக வணிக பயன்பாட்டுக்கான



சிலிண்டர் விநியோகத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் ஹோட்டல்கள், சிற்றுண்டி ஆகியவை பாதிக்கப்பட்டுள்ளன.Rail Freight

இந்த நிலையில், கேஸ் ஏஜென்சி நிறுவனங்கள், மணலி, ஆ.முல்லைவாயில், பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தின் வாசலில் எல்பிஜி எரிவாயு சிலிண்டர் நிரப்பும் நிறுவனத்தின் சுமார் 70க்கும் மேற்பட்ட லாரிகள் கேஸ் சிலிண்டர்களை எடுத்து செல்ல வரிசையாக நின்றது. மருத்துவமனை, விடுதிகள் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைக்காக வணிக சிலிண்டர்களை கொண்டுவந்து கேஸ் நிரப்பி எடுத்து சென்றனர். இவ்வாறு ஏராளமான சிலிண்டர் ஏற்றி செல்லும் லாரிகள் மணலி ஆ.முல்லைவாயில் பகுதியில் நின்றதால் பரபரப்பு ஏற்பட்டது.

# ஐதராபாத்தில் இருந்து தாய்லாந்து சென்ற ஏர் இந்தியா விமானம் விபத்து

ஐதராபாத், மார்ச்.12-

ஐதராபாத்தில் இருந்து தாய்லாந்து சென்ற ஏர் இந்தியா விமானத்தின் டயர் வெடித்து விபத்து ஏற்பட்டது. புகெட் விமான நிலையத்தில் விமானம் தரையிறங்கியபோது தரையில் வேகமாக விமானம் மோதியதில் முன்பக்க டயர் வெடித்தது. இதனால் விமானம் ஆபத்தான நிலையை எதிர்கொண்டது. எனினும் விமானி சாதுர்யமாக செயல்பட்டு விமானத்தை பத்திரமாக தரையிறக்கினார். இதனால் விமானம் ஓடுபாதையின் நடுவிலேயே நின்றது. விபத்தை அடுத்து புகெட் விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது.



விமானத்தில் இருந்த 133 பயணிகளும் எவ்வித காயமுமின்றி பத்திரமாக வெளியேற்றப்பட்டனர். புக்கெட் விமான நிலையத்தின் ஓடுபாதை பல மணி நேரம் மூடப்பட்டது. ஓடுபாதை முழுமையாக சோதிக்கப்பட்டு, பாதுகாப்பானது என உறுதி செய்யப்பட்ட பிறகே விமானப் போக்குவரத்து மீண்டும் தொடங்கப்பட்டது. விமானத்தின் முன் சக்கரம் சேதமடைந்ததற்கான சரியான காரணம் குறித்து விரிவான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. விமானம் தரையிறங்கும் போது ஏற்பட்ட இந்த எதிர்பாராத நிகழ்வால் பயணிகள் பீதி அடைந்தனர்.

# தூய்மையான திசையன்விளையை நோக்கி: சுகாதாரத் துறைக்கு புதிய வாகனங்களை வழங்கிய தலைவர் ஜான்சி ராணி!

திசையன்விளை, மார்ச். 12-

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை பேரூராட்சியில் சுகாதாரப் பணிகளைத் துரிதப்படுத்தவும், நகரத்தைத் தூய்மையாகப் பராமரிக்கவும் நான்கு புதிய வாகனங்கள் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டன.

பேரூராட்சி மன்றத் தலைவி ஜான்சி ராணி தலைமையில், துணைத் தலைவர் ஜெயக்குமார் முன்னிலையில் இந்த



புதிய வாகனங்கள் சுகாதாரத் துறையிடம் வழங்கப்பட்டன. இப்பேரூராட்சியில் குப்பைகளைச் சேகரிக்கவும், சுகாதாரச் சீர்கேடுகளைத் தடுக்கவும் இந்த வாகனங்கள் பெரிதும் உதவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் கவுன்சிலர்கள் லிவ்யா சக்திவேல் குமார், முத்துக்குமார், எம். என். கண்ணன், எஸ். எம். டி. அலெக்ஸ், நடராஜன், அய்யா குட்டி, பிரேம்குமார், மணலி ஆர். எஸ். ராஜா மற்றும் பேரூராட்சி ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டு வாகனங்களைப் பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தனர்.

புதிய வாகனங்கள் வந்ததன் மூலம் திசையன்விளை பேரூராட்சி பகுதியில் தூய்மைப் பணிகள் இனி கூடுதல் வேகத்துடன் நடைபெறும் என்பதால், பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

# யுபிஎஸ்சி தேர்வில் தேர்ச்சி சாதாரண சாதனை அல்ல; முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்



சென்னை: மார்ச்.12-

"உலகிலேயே கடினமான யுபிஎஸ்சி தேர்வில் வெற்றி பெற்றிருக்கும் அனைவருக்கும் எனது பாராட்டுகளும், வாழ்த்துகளும். நீங்கள் படைத்திருப்பது சாதாரண சாதனை அல்ல" என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடந்த அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு வெற்றியாளர்களுக்கான பாராட்டு விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: கடந்த காலங்களில் தமிழகத்தில் இருந்து யுபிஎஸ்சி தேர்வில் வெற்றி பெறுவோர் எண்ணிக்கை குறைந்து வந்தது. திராவிட மாடல் ஆட்சி அமைந்ததும் இதை உடனடியாக சரி செய்ய முயற்சிகளை மேற்கொண்டோம். அதற்கான பலன் தற்போது கிடைத்துள்ளது.

மகிழ்ச்சி

இந்த ஆண்டு தமிழகத்தில் இருந்து இந்திய குடிமைப் பணிக்கு தேர்வாகியுள்ள 60 பேரில் 56 பேர் 'நான் முதல்வன்' திட்டத்தில் பயன்பெற்றவர்கள் என்பது கூடுதல் மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த எண்ணிக்கை மேலும் கூட வேண்டும். தமிழகத்தில் இருந்து பல இளைஞர்கள் இந்தியாவின் பல மாநிலங்களுக்கு சென்று எளிய மக்களுக்காக பணியாற்ற வேண்டும். நாடுகளுக்கு இடையிலான உறவையும் மேம்படுத்த வேண்டும்.

கடினமான தேர்வு

குடிமைப்பணி தேர்வில் கடுமையான உழைப்பை கொடுத்து வெற்றி பெற்றுள்ள உங்களுக்கு பாராட்டுகளும், வாழ்த்துகளும். நீங்கள் படைத்திருப்பது சாதாரண சாதனை அல்ல; உலகளவில் மிகவும் கடினமான தேர்வு யுபிஎஸ்சி. தேர்வுக்கு தயாராகவே மன வலிமை, ஒழுக்கத்தை சோதித்துப் பார்க்கும் அளவு கடுமையானது.

நிறைவேற்றுங்கள்

உங்கள் கனவு நிறைவேறி விட்டது. இனி மக்கள் கனவுகளை நிறைவேற்றுங்கள். நீங்கள் எவ்வளவு பிஸியாக இருந்தாலும், குறைந்தபட்சம் ஒரு போனாவது செய்து அப்பா, அம்மாவிடம் நலம் விசாரியுங்கள். இந்த அக்கறையும், அன்பும்தான் உங்களுடைய Career முன்னேற்றத்துக்கு துணையாக இருக்கும். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

சென்னையில் நடந்த அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு வெற்றியாளர்களுக்கு பாராட்டு விழாவில் முதல்வர் ஸ்டாலின் பங்கேற்றார். இந்த நிகழ்ச்சி தினமலர் யுடியூப் உள்ளிட்ட இணையத்தில் நேரலை ஒளிபரப்பு செய்யப்பட்டது.

இதுதான் வளர்ச்சி!

இது குறித்து முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: குடிசையில்லாத் தமிழகம் எனும் கனவை அடைந்திடும் நோக்கத்துடன் 1970ல் கருணாநிதி "தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம்" உருவாக்கினார். திராவிட மாடல் ஆட்சியில் அதனை "நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்" எனப் பெயர் மாற்றினோம். இது வெறும் பெயர் மாற்றமல்ல; செயலாற்றலில் புதுப் பாய்ச்சல் என நிரூபித்திருக்கிறோம். அதற்கான Data இதோ:

கடந்த 201621ல் அதிமுக ஆட்சிக்காலத்தில், இந்த வாரியத்தின் மூலம், சென்னை மற்றும் பிற மாவட்டங்கள் என மொத்தம் 27,668 குடியிருப்புகள்தான் உருவாக்கப்பட்டன. திராவிட மாடல் ஆட்சியில் சென்னை 30,167, மற்ற மாவட்டங்களில் 46,207, என மொத்தம் 76,374 குடியிருப்புகளை உருவாக்கியுள்ளோம். கடந்த ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட ஒட்டுமொத்தக் குடியிருப்புகளின் எண்ணிக்கையைவிட, நமது ஆட்சிக்காலத்தில் சென்னையில் மட்டும் உருவாக்கப்பட்டுள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை அதிகம்.

இதுதான் மாற்றம். இதுதான் வளர்ச்சி. இதுதான் செயலாற்றல். இதன் தொடர்ச்சியாக 700 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கொண்ட "முதல்வர் நகர்ப்புறக் குடியிருப்புகள்" உள்ளிட்ட திட்டப்பணிகளை இன்று தொடங்கி வைத்தேன். திராவிட மாடலின் 2.0 ஆட்சியில் இது இன்னும் பன்மடங்காகும். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறினார்.

# சிவகங்கை எம்.பி., அலுவலகத்தில் பெட்ரோல் குண்டு வீச்சு



சிவகங்கை: மார்ச்.12–

காரைக்குடியில் அமைந்துள்ள சிவகங்கை தொகுதி எம்பி கார்த்தி மற்றும் முன்னாள் மத்திய அமைச்சர் சிதம்பரம் ஆகியோரின் அலுவலகத்தில் பெட்ரோல் குண்டு வீசப்பட்டது.

காரைக்குடி சுப்பிரமணியபுரம் முதல் வீதியில் காங்கிரஸ் எம்பி கார்த்தி சிதம்பரம் மற்றும் முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் ஆகியோரின் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. நேற்று காலை கட்சியினர் வந்து அலுவலகத்தை திறந்த போது, பெட்ரோல் குண்டு வீசப்பட்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

இதையறிந்து, காரைக்குடி தொகுதி காங்கிரஸ் எம்எல்ஏ மாங்குடி மற்றும் கட்சியினர் உடனே நேரில் வந்து பார்வையிட்டனர். பின்னர், இது தொடர்பாக போலீசாருக்கு தகவல் அளித்தனர். அதன்பேரில், சம்பவ இடத்திற்கு சிவகங்கை மாவட்ட எஸ்பி சிவபிரசாத் நேரில் வந்து ஆய்வு செய்தார்.

எம்பி அலுவலகத்தில் கண்காணிப்பு கேமரா எதுவும் இல்லாததால், அருகே இருக்கும் மற்ற கட்டடங்களில் பொருத்தப்பட்டுள்ள கேமராக்களை ஆய்வு செய்து வருகின்றனர். மேலும், பெட்ரோல் குண்டு வீசியவர்கள் யாராக இருக்கும்? என்ன காரணத்திற்காக இந்த செயலை செய்தார்கள் என்பது குறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.




# சமையல் எரிவாயு சிலிண்டர் விலை உயர்வை கண்டித்து மார்ச் 14 தமிழகத்தில் ஆர்ப்பாட்டம்: மு.வீரபாண்டியன்



சென்னை: மார்ச்.12-

சமையல் எரிவாயு விலை உயர்வை கண்டித்து மார்ச் 14 ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழுக் கூட்டம் இன்று (புதன் கிழமை) சென்னையில் உள்ள மாநிலக் கட்சி அலுவலகத்தில் தோழர்கள் எம்.செல்வராஜ், (திருச்சி), டாக்டர் ஏ.ஆர்.சாந்தி, எஸ்.கே. சிவா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்திய ஒன்றிய அரசின் பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள், வீட்டு உபயோக, வணிகப் பயன்பாட்டு சமையல் எரிவாயு சிலிண்டர் விலைகளை முறையே ரூ. 60, ரூ. 114.50 என உயர்த்தியுள்ளது. இந்த விலை உயர்வுக்கு மேற்காசிய நாடுகளில் ஏற்பட்டுள்ள பதற்றத்தையும், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகளின் யுத்தவெறி தாக்குதலால் மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளையும் காரணம் காட்டியுள்ளது.

அமெரிக்கா இஸ்ரேல் நாடுகள் சர்வதேச நாடுகளுக்கு கச்சா எண்ணெய் எடுத்துச் செல்லும் முக்கிய கடல் வழி பாதையான ஹார்முஸ் துறைமுகத்தின் மீது நடத்திய தாக்குதல் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. விசாகப்பட்டினத்தில் பிப்ரவரி 19 25 தேதிகளில் நடைபெற்ற பன்னாட்டு கடற்படைப் பயிற்சியில் (மிலான்) பங்கேற்று நாடு திரும்பிய ஈரான் போர்க்கப்பல் மீது அமெரிக்கா நீர்மூழ்கி கப்பல் இந்திய கடல் எல்லைக்குள் இருந்த போது தாக்குதல் நடத்தி, அதிலிருந்த 83 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இது குறித்து பாஜக ஒன்றிய அரசு வாய்திறந்து பேசாமல், நாட்டின் அயலுறவு கொள்கைக்கு துரோகம் இழைத்து, கோழைத்தனத்தை வெளிப்படுத்தியுள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின், டொனால்டு டிரம்ப் நிர்வாகத்தின் நிர்பந்தத்திற்கு அடி பணிந்து, ரஷ்ய நாட்டிலிருந்து குறைந்த விலையில் கச்சா எண்ணெய் வாங்கி வந்ததை நிறுத்தி விட்டது. இப்போது நெருக்கடி ஏற்பட்ட நிலையில் ஒரு 30 நாட்கள் மட்டும் ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்கிக் கொள்ள அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பிடம் அனுமதி கேட்டு, நாட்டின் இறையாண்மையை கை விட்டுள்ளது.

நீடித்த அமைதி மற்றும் நிலைத்த சமாதானத்திற்கு குரல் கொடுக்க தவறியதன் மூலம் கச்சா எண்ணெய் நெருக்கடியை நாடு எதிர் கொண்டு நிற்கிறது. சமையல் எரிவாயு விலைகளை உயர்த்தியதுடன் தீவிர கட்டுப்பாடுகளும், நிபந்தனைகளும் விதிக்கப்பட்டுள்ளன. வீட்டு உபயோகத்திற்கான சிலிண்டர் 15 நாட்களுக்கு ஒரு முறை பதிவு செய்யலாம் என்பதை மாற்றி, சிலிண்டர் பெற்ற பிறகு 25 நாட்களுக்கு பிறகுதான் அடுத்த சிலிண்டருக்கு பதிவு செய்ய வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இப்போதே பதிவுக்கான கோரிக்கைகளை ஏற்பதில்லை என்பது நடைமுறையாகி விட்டது. இது குடும்பத் தேவைகளுக்கு மீண்டும் விறகு தேடும் நிலைக்கு மக்களை தள்ளி விடுவதுடன், கள்ளச் சந்தை வணிகத்தை ஊக்கப்படுத்தி வருகிறது. இதனால் உணவகங்கள், தேனீர் கடைகள் உள்ளிட்ட வர்த்தகம் கடுமையாக பாதிக்கப்பட்டு, நிறுவனங்கள் மூடப்பட்டு வருகின்றன என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சுட்டிக் காட்டுகிறது.

இந்த நிலையில் சமையல் எரிவாயு சிலிண்டர் விலை உயர்வுக்கு கண்டனம் தெரிவித்து, உயர்த்தப்பட்ட விலை உயர்வை ரத்து செய்து, தட்டுபாடு இல்லாமல் சமையல் எரிவாயு கிடைக்க, ஜாம் நகர் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் ஏற்றுமதியை நிறுத்தி, உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்வதையும், ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் எண்ணெய் பொதுமக்கள் தேவைக்காக உள்நாட்டு தேவைக்கு பயன்படுத்துவதையும் உறுதி செய்ய ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி வரும் 14 ஆம் தேதியில் மாவட்ட, வட்ட, வட்டாரத் தலைநகர்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு முடிவு செய்கிறது.

நாட்டின் நலனையும், மக்கள் நலனையும் முன்னிறுத்தி நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் அனைத்துப் பிரிவு மக்களும் பங்கேற்று ஆதரிக்குமாறு கேட்டுக் கொள்கிறது" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# எல்பிஜி சிலிண்டர் நெருக்கடி : நாடாளுமன்றத்தில் விவாதிக்க வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம்

புதுடெல்லி: மார்ச்.12-

நாடு முழுவதும் எல்பிஜி சிலிண்டர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில் அது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வலியுறுத்தி மக்களவையில் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன. இதனால், அவை சிறிது நேரம் ஒத்திவைக்கப்பட்டது.

இதையடுத்து, நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி எம்பிக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். காங்கிரஸ் மூத்த தலைவர் பிரியங்கா காந்தி உள்ளிட்ட எம்பிக்கள் இதில் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் எம்பி கே.சி. வேணுகோபால், "வணிக பயன்பாட்டுக்கு எல்பிஜி சிலிண்டர்களை வழங்க வேண்டாம் என்று எரிவாயு நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் அனுப்பப்பட்டுள்ளதாக தகவல் வந்துள்ளது. நிலைமை நாள்தோறும் மோசமாகிறது. மத்திய அரசு நாட்டு மக்களிடம் பொய்களைக் கூறி வருகிறது" என குற்றம் சாட்டினார்.

மற்றொரு காங்கிரஸ் எம்.பி. கே. சுரேஷ், "நாட்டில் சிழிநி நெருக்கடி மிகவும் தீவிரமாக உள்ளது. உண்மையான நிலையை அரசு வெளிப்படுத்தவில்லை. பல ஹோட்டல்கள் மற்றும் தொழில்கள் மூடப்பட்டுள்ளன. நிலைமை மிகவும் மோசமாக இருந்தாலும், கவலைப்பட வேண்டியதில்லை என்று அரசு கூறுகிறது. ஆனால் ஹோட்டல் மற்றும் உணவக உரிமையாளர்கள் நிலைமை தீவிரமாக இருப்பதாகக் கூறுகின்றனர். அரசு மக்களை தவறாக வழிநடத்துகிறது" என குறிப்பிட்டார்.

உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனா (ஹிங்ஜி) எம்.பி. பிரியங்கா சதுர்வேதி, "ஈரானுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் போவதாக அமெரிக்கா தொடர்ந்து கூறி வந்தது. போர் தொடங்குவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு நமது பிரதமர் இஸ்ரேலுக்கு சென்றார். போர் முதலில் இஸ்ரேல் தரப்பிலிருந்து தொடங்கியது, அமெரிக்கா அதை ஆதரித்தது.

நாடாளுமன்ற கூட்டத்தொடரின் போது பெட்ரோலிய அமைச்சர் பதிலளித்தபோது, 'நமக்கு 72 நாட்களுக்கு போதுமான எண்ணெய் கையிருப்பு இருக்கிறது. லிறிநி கையிருப்பும் உள்ளது, லிழிநி பற்றாக்குறையும் இல்லை. எந்த சூழ்நிலையையும் எதிர்கொள்ள தயாராக உள்ளோம்' என்றார். ஆனால் விலை குறைந்திருந்தபோது பொதுமக்களுக்கு எந்த பயனும் கிடைக்கவில்லை; எண்ணெய் நிறுவனங்கள் லாபம் பெற்றன. விலை உயர்ந்தவுடன் சிலிண்டர் விலையும் உயர்த்தப்பட்டது. இன்று எரிவாயு சார்ந்த தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன. புனேயில் ஒரு சுடுகாடு கூட மூடப்பட்டுள்ளது. இதற்காக அரசு என்ன தயாரிப்புகளை செய்தது?" என கேள்வி எழுப்பினார்.

திரிணமூல் காங்கிரஸ் எம்.பி. சவுகத் ராய் கூறுகையில், "எல்பிஜி விலை உயர்ந்துள்ளது; விமான கட்டணங்களும் அதிகரித்து வருகின்றன. இது மத்திய அரசின் தோல்வி. பொதுமக்கள் பாதிக்கப்படாமல் இருக்க அரசு முன்கூட்டியே நடவடிக்கை எடுத்து சலுகைகள் வழங்கியிருக்க வேண்டும்" என தெரிவித்துள்ளார்.

# ரிலையன்ஸ் ஆதரவுடன் டெக்சாஸில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைகிறது



வாஷிங்டன்: மார்ச்.12-

அமெரிக்காவின் டெக்சாஸில் 300 பில்லியன் டாலர் மதிப்பில், ரிலையன்ஸ் நிறுவனத்தின் ஆதரவுடன் புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தொடங்கப்படும் என அதிபர் ட்ரம்ப் அறிவித்தார்.

இதுகுறித்து ட்ரூத் சமூக வலைதளத்தில் டொனால்டு ட்ரம்ப் வெளியிட்ட பதிவில், "அமெரிக்க எரிசக்தி உற்பத்தியை அதிகரிப்பதையும், சர்வதேச கூட்டாளிகளுடனான பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட 300 பில்லியன் டாலர் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக டெக்சாஸின் பிரவுன்ஸ்வில்லில் புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும்.

இந்த மகத்தான முதலீட்டுக்கு இந்தியாவில் உள்ள எங்கள் கூட்டாளிகளுக்கும், அவர்களின் மிகப்பெரிய தனியார் எரிசக்தி நிறுவனமான ரிலையன்ஸுக்கும் நன்றி. இந்தத் திட்டம் நாட்டின் எரிசக்தித் துறையில் ஒரு முக்கிய மைல்கல்லாக இருக்கும்.

இப்போது அமெரிக்கா உண்மையான ஆற்றல் ஆதிக்கத்திற்குத் திரும்புகிறது. இன்று டெக்சாஸின் பிரவுன்ஸ்வில்லில் 50 ஆண்டுகளில் முதல் புதிய அமெரிக்க எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைகிறது என்பதை அறிவிப்பதில் பெருமைப்படுகிறேன்.

300 பில்லியன் டாலர் மதிப்புள்ள இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தம் அமெரிக்க வரலாற்றில் மிகப்பெரியது. இது ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கி தெற்கு டெக்சாஸில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும்.

பிரவுன்ஸ்வில் துறைமுகத்தில் அமையும் இந்த புதிய சுத்திகரிப்பு நிலையம் அமெரிக்க சந்தைகளுக்கு முக்கிய பங்களிக்கும். நமது தேசிய பாதுகாப்பை வலுப்படுத்துவதுடன், அமெரிக்க எரிசக்தி உற்பத்தியையும் அதிகரிக்கும்.

'அமெரிக்கா முதலில்' என்பதுதான் எங்களின் கொள்கை, அனுமதிகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் வரிகளைக் குறைத்தல் ஆகியவற்றின் காரணமாகவே, பில்லியன் கணக்கான டாலர் ஒப்பந்தங்கள் நமது நாட்டிற்கு மீண்டும் வருகின்றன" என்றார்.

மத்திய கிழக்கில் ஈரானுக்கும், இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவுக்கும் இடையே கடுமையான மோதல் நிலவி வரும் நிலையில், ட்ரம்ப்பின் இந்த புதிய அறிவிப்பு வந்துள்ளது.

# 13 ஆண்டுகள் கோமாவில் உள்ள உ.பி. இளைஞரின் 'உயிர் காக்கும் கருவிகளை' அகற்ற உச்ச நீதிமன்றம் அனுமதி

புதுடெல்லி: மார்ச்.12-

உத்தரப் பிரதேசத்தின் காசியாபாத்தைச் சேர்ந்த 31 வயது இளைஞர் ஒருவர், கடந்த 13 ஆண்டுகளாக எவ்வித முன்னேற்றமும் இல்லாமல் கோமாவில் உள்ள நிலையில் அவருக்கு அளிக்கப்பட்டு வரும் உயிர் காக்கும் கருவிகளை அகற்ற அனுமதி கோரி பெற்றோர் தாக்கல் செய்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், அனுமதி அளித்து உத்தரவிட்டுள்ளது.

உத்தரப் பிரதேசத்தின் காசியாபாத் நகரைச் சேர்ந்த ஹரீஷ் ராணா பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் படித்து வந்தார். 'பேயிங் கெஸ்ட்' விடுதியில் தங்கி இருந்த போது கடந்த 2013ஆம் ஆண்டு விடுதியின் நான்காவது மாடியில் இருந்து தவறி விழுந்து அவர் படுகாயமடைந்துள்ளார். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு மூளையில் காயம் ஏற்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. ஹரீஷ் ராணாவுக்கு தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டபோதிலும் எவ்வித முன்னேற்றமும் இல்லாத நிலையில், உயிர் காக்கும் மருத்துவக் கருவிகளின் உதவியுடன் அவர் உயிர் வாழ்ந்து வருகிறார்.

சுவாசிக்க tracheostomy குழாயும், உணவு அளிக்க gastrojejunostomy குழாயும் அவருக்கு பொருத்தப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் மட்டுமே அவர் வாழ்ந்து வருகிறார். இந்நிலையில், ஹரீஷ் ராணாவுக்கான உயிர் காக்கும் கருவிகளை அகற்ற அனுமதி கோரி அவரது பெற்றோர் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். இந்த மனுவை, நீதிபதிகள் ஜே.பி. பார்திவாலா, கே.வி. விஸ்வநாதன் ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்து தீர்ப்பளித்தது.

நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில், "ஹரீஷ் ராணா ஒருகாலத்தில் பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வந்த திறமையான 20 வயது இளைஞர். ஒரு கட்டிடத்தின் நான்காவது மாடியில் இருந்து விழுந்ததால் அவருக்கு மூளை காயம் ஏற்பட்டது.

மருத்துவமனையில் இருந்து வெளியேற்றப்பட்டாலும், அந்த மூளை காயம் அவரை நிரந்தரமாக ஒரு தாவரத்தைப் போல வாழ வைத்துவிட்டது. தூக்கம்விழிப்பு சுழற்சியை அவர் உணர்கிறார். ஆனால் முழுமையாக பிறரின் உதவியையே சார்ந்து இருக்கிறார். 13 ஆண்டுகளாக எந்த முன்னேற்றமும் இல்லை என்று மருத்துவ அறிக்கை தெரிவிக்கிறது.

'மனிதன் வாழ்க்கையை ஏற்கிறானா என்று கடவுள் கேட்பதில்லை; அதை நீ ஏற்க வேண்டியது தான்' இது அமெரிக்க மதபோதகர் ஹென்றி வார்ட் பீச்சரின் வார்த்தைகள். ஒருவர் மரணத்தைத் தேர்வு செய்யலாமா என்று நீதிமன்றத்திடம் கேட்கப்படும் போது இந்த வார்த்தைகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

உயிர் காக்கும் சாதனங்களை அகற்றுவதற்கு இரண்டு அடிப்படைகள் இருக்க வேண்டும். 1. அந்த நடவடிக்கை மருத்துவ சிகிச்சை (Medical Treatment) எனக் கருதப்பட வேண்டும். 2. அது நோயாளியின் சிறந்த நலனுக்கானதாக (Best Interests of the Patient) இருக்க வேண்டும். இது ஹரீஷ் ராணாவுக்கு பொருந்துவதால், அவரது பெற்றோரின் கோரிக்கை ஏற்கப்படுகிறது" என தெரிவித்துள்ளனர்.

மேலும், "இதுபோன்ற ஒரு நோயாளியின் நிலையைப் பற்றி இரண்டு மருத்துவ குழுக்களின் கருத்தை ஆய்வு செய்த பிறகு அவரை கருணைக் கொலை செய்வதற்கான சட்டத்தை கொண்டு வருவது பற்றி பரிசீலிக்க வேண்டும்" என்று மத்திய அரசை நீதிபதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000



■ 2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தென்காசி மாவட்ட காவல்துறையினரின் கொடி அணிவகுப்பு நடைபெற்றது. மக்கள் அச்சமின்றி வாக்களிக்கவும், மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் விதமாகவும், தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நி.ஷி.மாதவன் T.P.S., தலைமையில், 02 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், துணை காவல் கண்காணிப்பாளர், 05 காவல் ஆய்வாளர்கள், 05 சார்பு ஆய்வாளர்கள், 10 சிறப்பு சார்பு ஆய்வாளர்கள், 40 துப்பாக்கி ஏந்திய மத்திய பாதுகாப்பு படையினர், 25 காவலர்கள், 20 ஆயுதப்படை காவலர்கள் சங்கரன்கோவில் அண்ணா புதிய பேருந்து நிலையத்தில் தொடங்கி அசெம்பிளி சந்திப்பு, கழுகுமலை ரோடு வழியாக மீண்டும் அண்ணா புதிய பேருந்து நிலையம் வரை கொடி அணிவகுப்பு நடைப்பெற்றது.



■ திண்டுக்கல் மாவட்டத்தில் புனித மரியன்னை மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு மையத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன் நேரில் சென்று ஆய்வு செய்தார்.



## ஓய்வு பெற்ற போக்குவரத்து பணியாளர்களுக்கு கௌரவம்

### அமைச்சர்கள் சிவசங்கர் மற்றும் ராஜேந்திரன் பங்கேற்பு

சேலம், மார்ச். மார்ச்.12-

சேலத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கான ஓய்வுக்கால பணப்பலன்கள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் சிறப்பு விருந்தினர்களாகப் போக்குவரத்துத் துறை மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் ச.சி. சிவசங்கர் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு, ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு உரிய பணப்பலன்களை வழங்கிச் சிறப்பித்தனர். நீண்ட காலம் போக்குவரத்துத் துறையில் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய பணியாளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவும், அவர்களின் ஓய்வுக்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்ச்சியில் அரசு போக்குவரத்துக் கழக உயர் அதிகாரிகள், மேலாளர்கள் மற்றும் திரளான ஓய்வு பெற்ற பணியாளர்கள் கலந்துகொண்டனர். அமைச்சர்கள் பணியாளர்களின் நலன் குறித்த அரசு எடுத்து வரும் தொடர் முயற்சிகளைப் பற்றிப் பேசினர். பணியாளர்கள் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய பணப்பலன்கள் உரிய நேரத்தில் கிடைத்ததில் மிகுந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.



## திசையன்விளை பேரூராட்சி பொது நிதியில் வளர்ச்சிப் பணிகள்

### பேவர் பிளாக் சாலையைத் தொடங்கி வைத்த தலைவி ஜான்சி ராணி

திசையன்விளை, மார்ச் 12-

தமிழக அரசின் திசையன்விளை பேரூராட்சி பொது நிதியிலிருந்து, 16வது வார்டு நாடார் தெற்கு தெரு பகுதியில் புதிய சாலை அமைக்கும் பணி மிகச்சிறப்பாக நடைபெற்றது.

சுமார் ₹19.50 இலட்சம் மதிப்பீட்டில், இப்பகுதி மக்களின் வசதிக்காக நவீன பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியினை 16வது வார்டு கவுன்சிலர் நடேஷ் அரவிந்த் முன்னின்று ஏற்பாடு செய்திருந்தார். திசையன்விளை பேரூராட்சி மன்றத் தலைவி ஜான்சி ராணி தலைமை ஏற்று இப்பணிகளைத் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் முன்னாள் கவுன்சிலர் ஜெயராஜ், குருவாயூரப்பன் ஜுவல்லர்ஸ் திருவடி, முத்து ஆசாரி, நந்தகோபால், குணசேகரன், சரவணன், பாஸ்கர், பாலாஜி, தம்பி ராஜ், ஆதி, ஐயப்பன், சண்முகம், திருப்பாற்கடல், அஜிஸ், சங்கர், பேரூராட்சி பிட்டர் ஹசன் அலி, டெல்சிராணி, பாப்பா, வெள்ளத்துரை உள்ளிட்ட முக்கியப் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டனர். புதிய சாலை வசதி ஏற்படுத்தப்பட்டதன் மூலம், இப்பகுதி மக்களின் போக்குவரத்துச் சிரமம் நீங்கி நீண்ட காலக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

## “விழிப்பாயிரு.. நெருப்பாய் எழு!”: பெருந்துறையில் விசிகவின் வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சி பாசறை



பெருந்துறை, மார்ச். 12-

ஈரோடு மாவட்டம் பெருந்துறை பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள தனியார் மண்டபத்தில், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் "விழிப்பாயிரு நெருப்பாய் எழு" என்ற முழக்கத்துடன் வாக்குச்சாவடி முகவர்கள் (PLA-2) பயிற்சி பாசறை மற்றும் அரசியல் சமூக விழிப்புணர்வு கருத்தரங்கம்,பெருந்துறை சட்டமன்றத் தொகுதி மாவட்டச் செயலாளர் விஜயபாலன் தலைமையில் நடைபெற்றது. மறைந்த ஏ.சி. பாவரசு மற்றும் ந.செந்தமிழன் ஆகியோரின் நினைவரங்குகளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. 'இனி வெளிச்சம்' புரட்சிகர கலைக்குழுவின் சோ செந்தமிழன் அவர்களின் கலை நிகழ்ச்சிகள் தொண்டர்களை உற்சாகப்படுத்தின. விசிக துணைப் பொதுச்செயலாளர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். மாநிலச் செயலாளர் காஞ்சி பார்வேந்தன் "பஞ்சமி நில உரிமைகள்" குறித்தும், மாநிலச் செயலாளர் கோவை சுசி கலையரசன் "பட்டியலின தலைவர்களின் தியாகங்கள்" குறித்தும் விரிவாகப் பேசினர்.சிறப்பு அழைப்பாளர்களாக ஏ. ஜாபர் அலி, இஷா தங்கவேல் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கோபி சட்டமன்றத் தொகுதி மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட திரளான கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் இந்தப் பயிற்சி முகாமில் பங்கேற்றுத் தேர்தல் காலப் பணிகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டனர்.




## வழக்குத் தொடரும் முன்பே தீர்வுகாண வாய்ப்பு

### தென்காசி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு அதிரடி உதவிகள்

தென்காசி, மார்ச். 12-

தென்காசி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் செயல்பாடுகளை முதன்மை மாவட்ட நீதிபதி பி.ராஜவேலு அவர்கள் முறைப்படி தொடங்கி வைத்தார். சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் உத்தரவின் பேரில் இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

நீதிபதி பி.ராஜவேலு செய்தியாளர்களிடம் கூறியதாவது:

" இதுவரை திருநெல்வேலி மாவட்டத்தின் கீழ் செயல்பட்டு வந்த தென்காசி சட்டப்பணிகள் ஆணைக்குழு, இனி தனித்துவமாகச் செயல்படும். இதன் மூலம் தென்காசி மாவட்ட பொதுமக்கள் சட்டம் சார்ந்த மற்றும் சட்டம் சாராத பிரச்சனைகளுக்கு நெல்லைக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை. தென்காசி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள தலைமை அலுவலகத்தை நாடினால் போதுமானது."

நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்கு முன்பே, இந்த ஆணைக்குழுவில் மனு அளித்துப் பரிகாரம் காணலாம். பட்டா மாற்றம் போன்ற அரசுத் துறை சார்ந்த குறைகளுக்கும் இங்கு மனு அளிக்கலாம். அந்த மனுக்கள் உடனடியாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் மாவட்ட நீதிபதி மனோஜ் குமார், முதன்மை சார்பு நீதிபதி பிஸ்மிதா மற்றும் மாவட்டத்தின் பல்வேறு நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலை வகித்தனர். மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவிற்கு எனத் தனியாகச் செயலாளரும் நியமிக்கப்பட்டுள்ளார்.



## “சிங்கம் போலக் களமிறங்குங்கள்!” ஆத்தூர் தொகுதி மகளிர் அணிக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி உற்சாக அழைப்பு

சின்னாளபட்டி, மார்ச். 12-

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் திமுக மகளிர் அணி சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் "வெல்லும் தமிழ் பெண்கள்" பிரச்சாரம், தொகுதி முழுவதும் பெரும் வரவேற்பையும், எழுச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட 46 கிராம ஊராட்சிகள் மற்றும் 7 பேரூராட்சிகளில், திமுக மகளிர் அணியினர் ஒவ்வொரு வீடாகச் சென்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சாதனைகளை விளக்கி வருகின்றனர். குறிப்பாக மகளிர் உரிமைத்தொகை, விடியல் பயணம், புதுமைப்பெண் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் மற்றும் காலைச் சிற்றுண்டி திட்டம் உள்ளிட்ட பெண்களுக்கான நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கின்றனர். அத்துடன், "ஸ்டாலின் தொடரட்டும் தமிழகம் வெல்லட்டும்" என்ற வாசகம் அடங்கிய ஸ்டிக்கர்களை வீடுதோறும் ஒட்டி வருகின்றனர்.

பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள பெண்களின் அர்ப்பணிப்பை நேரில் பாராட்டி வரும் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள், அவர்களுக்கு நிதி உதவிகளையும் வழங்கி ஊக்குவித்து வருகிறார். இதற்கிடையே, "சிங்கம் போலப் புறப்பட்டுப் பணியாற்றும் இந்த வெல்லும் தமிழ் பெண்களுக்கு, அந்தந்த பகுதி திமுக நிர்வாகிகள் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து, முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என அதிரடியாக உத்தரவிட்டுள்ளார்.

திமுக வரலாற்றில் எப்போதும் இல்லாத அளவிற்கு, பெண்களின் இந்தத் தனித்துவமான மற்றும் வீரியமிக்க பிரச்சாரம் பொதுமக்களிடையே பெரும் பேசுபொருளாக மாறியுள்ளது.



















SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000